# தேச பக்தி

அல்லது

# "வாலிபர் கடமை"

"மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே
மரத்தை வெட்டி மனை செய்குவீரே
உண்ணக் காய்கனி தந்திடுவீரே
உழுது நன்செய்ப் பயிரிடுவீரே
எண்ணெ, பால் நெய் கொணர்ந்திடுவீரே
இழையை நூற்று நல்லாடை செய்வீரே
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே."

"பாரதியார்"



## யுவர்கள் வேலை.

பிதுர்பக்தி, தெய்வபக்தி, குருபக்தி, தேசபக்தி யிவற்றுள் எது சிறந்தது என்று என்னைக் கேட்பீராயின், தேச பக்தியே சிறந்ததென்று கூறுவேன். தேசமில்லாவிட்டால் மற்றதுகள் எது? சுவர் இல்லாமல் சித்திரம் வரைய முடியுமா? ஆகவே நமக்கு எந்தபக்தி யிருந்தாலும் தேச பக்தியிலே முன்னே கவனம் செலுத்தவேண்டும். இத்தனை காலம் தூங்கித்தூங்கி அலுத்துப்போயிருக்கிறோம். நாம் தோள்தட்டி தேசநிர்மாண வேலைகளிலே இறங்காவிட்டால், நமக்கு பின் சந்ததியார் நம்மைத் தூற்றுவார்கள். ஏனெனில் இப்பொழுது வீசும் சுதந்தரக் காற்றிலே கருதரித்து பிறக்கும் குழந்தைகள் நம்மைவிட புத்திசாலிகளாகவும், வீரர்களாகவும், பிறப்பார்கள். நாம் பல தேச சரித்திரங்களைப் படிக்கிறோம். அதிலே என்ன தெரிந்து கொள்ளுகிறோம். ஒவ்வொரு தேசத்தின் அபிவிருத்திக்

கும், செல்வத்திற்கும், சுதந்தரத்துக்கும் வாலிபர்கள் அரும்பாடுபட்டதை படிக்கிறோம். ஆனால் அந்தப் படிப்பு அநுஷ்டானத்திலிருக்கிறதா? இல்லவேயில்லை. இதே மாதிரி நம்நாடு அந்தகாரத்தில் இன்னும் மூழ்கிக்கிடந்தால் எப்பொழுது விருத்தியடையும் என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். புன்னகையுடன் தேசீய நிர்மாண வேலையில் இறங்குவதே நம் கடமையாகும். ஜாதி சமயப் பற்றுகள் நமக்கு வேண்டாம். அவைகளைப்பற்றி யாராவது சோம்பேரிகள் பேசிக்கொண்டிருக்கட்டும். நமக்கு எந்த ஜாதியாயினும் சகோதரனே.

ஆஸ்டிரியா தேசத்துக்கு அடிமைபட்டுகிடந்த இடாலி தேசத்தை அவ்வடிமை விலங்கினின்று மீட்டு சுதந்தரத்தை யடைந்து, தற்காலம் ஐரோப்பில் இடாலியும் ஒரு வல்லரசு, விவசாயம், கைத்தொழில் வியாபாரம் முதலிய வற்றில் விஷேச அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்று பலர் சொல்லும்படி செய்தது யார்? “ஸிக்மென் ஆப் யூரோப்” ஐரோப்பாவின் காயலா மனிதன் என்று ஐரோப்பியர்கள் இழிவாக கருதிவந்த “துருக்கி” தேசத்தை தற்கால உன்னதஸ்திதிக்கு கொண்டுவந்தவர்கள் யார்? யூகோ ஸ்லோவாகியா, ஸ்விட்ஜர்லாண்ட், சைனு முதலிய எந்த நாடும் அந்தந்த நாட்டின் வாலிபர்களாலேயே அபிவிருத்திக்கு கொண்டுவரப்பட்டனவென்று தெரிந்தும் நாம் வாளாயிருக்கலாமா? இந்தியத் தாயின் வயிற்றிலே பிறந்து அத்தாயிக்கு பணி செய்யாதிருத்தல் தர்மமாகுமா? என்பதை சற்று நினைத்துப் பாருங்கள்.

அமெரிக்கா சென்று திரும்பிய சீனவாலிபர்கள் சிலர் ஷாங்கையில் “நாய்களும், சீனர்களும் அநுமதிக்கப்படுவதில்லை” என்ற போர்டைக் கண்டு மனம் வெதும்பி, பொருமை, விடாமுயற்சி, தியாகம், இவற்றால் பெரிய இயக்கத்தை நடத்தி சொற்பகாலத்தில் அன்னிய எஜமானர்களைப் போக்கி, சுயராஜ்யத்தை ஸ்தாபித்து அந்த போர்டு இருந்த இடத்தில் “நாய்கள் அனுமதிக்கப்படும் ஆனல் அன்னியருக்கு இடமில்லை” என்று புதிய போர்டை போட்டார்கள். ஒவ்வொரு தேசமும் வாலிபர்களின்

தியாகத்தாலும், விடாமுயற்சியாலுமே விருத்தி யடைந்திருக்கிறது.

சுயராஜ்யம் வரும்வரையில் நாம் தூங்கிக்கொண்டிருப்பதா? அதற்குமுன்பு நாம் செய்யவேண்டிய வேலைகள் அநேகம் இருக்கின்றன. கொள் என்றால் வாயைத் திறப்பதும் கடிவாளம் என்றால் ஓடுவதுமாயிருக்கும் குதிரையைப்போலிருப்பது நம்மவரில் அநேகருக்கு சகஜமாய் போய்விட்டதைக்குறித்து வருந்துகிறோம். இஸ்லாமியர்கள் மஹமத்நபி யவர்களின் திருவாக்கையும், கிருஸ்தவர்கள் இயேசுகிருஸ்துவின் திருவாக்கையும் எவ்வளவு முக்கியமாகவும், சிரேஷ்டமாயும் கருதுகிறார்களோ, அதைப்போல் இந்துக்களாகிய நாம் மஹாத்மா காந்தியவர்களின் சொல்லை முக்கியமாய் கருதவேண்டும். மஹாத்மா காந்திஸர், ராவ்பகதூர், திவான்பகதூர் பட்டங்களுக்கோ, பதவிகளுக்கோ வேட்டையாடவில்லை. சகலத்தையும் துறந்து தேசத்தையும், தேச ஜனங்களையும் காப்பாற்றுவான் வேண்டி எவ்வளவோ தியாகம் செய்தார், செய்கிறார், செய்யப்போகிறார். உலகமே போற்றும் உத்தமர், அஹிம்சா தர்மத்தை கடைபிடித்தொழுகும் சிரேஷ்டர், சத்தியமே உருவெடுத்தாற்போன்ற மஹாத்மா காந்தியவர்களின் கட்டளைப்படி நடப்பதே நம் முக்கிய கடமையாகும். சுடர்விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும். நமக்கு எவ்வளவோ ஆண்மையும், பலமும் இருக்கிறதெனினும், நற்புத்தி புகட்டி நல்வழியில் கொண்டுபோக தலைவர் ஒருவர் வேண்டும். மோட்டார் வண்டியில் எவ்வளவோ கருவிகள் இருப்பினும் "ஸ்டீயரிங்" அல்லது திருப்பும்கருவி இல்லாவிட்டால் என்னவாகுமோ, அதைப்போலவே தேசத்துக்கு தலைவர் ஒருவர் இல்லையேல் நம் முயற்சிகள் சிதறுண்டுபோகும். தலைவர் வாக்கை நாம் தட்டாமல் நடத்தல்வேண்டும்.

இப்பொழுது தேசமெங்கும் நடைபெறும் "மது விலக்கு வேலை, தீண்டாமை விலக்கு வேலை, கதர் அபிவிருத்தி வேலை" இவைகளில் நாம் தீவிரமாய் கலந்துகொள்ளல்வேண்டும். இந்த வேலைகளில் கலந்துகொள்ளும்

போது மனது, வாக்கு, காயம், இம்மூன்றிலும் அஹிம்ஸையையே கடைபிடித் தொழுகவேண்டும். சொந்த வேலைகளை விட்டுவிட்டு சதா இந்த இயக்கங்களிலே கலந்து கொள்ளும்படி நாம் சொல்லவில்லை. பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், வியாபாரம் செய்யும் வாலிபர்கள், தையல் வேலை செய்வோர்கள், இன்னும் பலவித தொழில்கள் செய்யும் வாலிபர்கள், தாங்கள் தொழில்செய்யும் நேரம்போக மிஞ்சியகாலத்தை மேல்கண்ட வேலைகளுக்கு செலவிடலாம். பள்ளியில் பயிலும் மாணவர்கள் பள்ளி நேரம்போக சாயங்காலங்களை டென்னிஸ், பேட்மின்டன், கிர்கட், ஹாகி, கால்பந்துவிளையாட்டு முதலிய நம்தேச சீதோஷ்ண ஸ்திதிக்கு ஒத்துக்கொள்ளாததும், பணச்செலவை யுண்டாக்குவதுமான விளையாட்டுகளில் செலவிடும் நேரத்தை மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, கதர் அபிவிருத்தி முதலிய நிர்மாண வேலைகள் செய்வதில் செலவிடலாம். விடுமுறை நாட்கள் பூராவிலும் இவ்வேலைகளைச் செய்யலாம். ஷெ விளையாட்டுகளை கற்றுக்கொள்ளுகிறவர்களும், விளையாடுவோரும், விளையாட்டுச் சாமான்களுக்கு அயல் நாடுகளுக்கு பணத்தை கொட்டிக்கொடுக்கின்றனர் என்பது அவர்களுக்கே தெரியும். கைராட்டையால் தினம் இரண்டு மணி நேரம் நூல் நூற்பது வரும்படியுள்ள விளையாட்டல்லவா? நாம் விளையாட்டு வேண்டாமென்று சொல்லவில்லை. பணச்செலவில்லாமல் எத்தனையோ விளையாட்டுகள் இருக்கின்றன. அமெரிக்கர்கள் "டாலர்களை" குவிப்பதே சிறந்த விளையாட்டாக கருதுகின்றனர்.

ஒருவர் கோல்ப், டென்னிஸ் முதலியவைகளைப்பற்றி உமது அபிப்பிராயமென்னவென்று கேட்டபோது இதாலியின் சர்வாதிகாரி "முஸ்ஸோலினி" விசேஷமானவைகளே. ஆனல் சாதாரண இதாலியனுக்கு இவ்விளையாட்டுக்கு காலமேது? அவன் குடும்பத்தை காப்பாற்றவே அவனுக்கு காலம் குறுகியது. ஆகையினுல் அவன் பார்த்துவரும் தொழிலுக்கிணங்க அவன் தேகப் பயிற்சி செய்யவேண்டும்" என்று பதிலளித்தாராம். இதாலியர் நிலைமையைவிட நம் நிலைமை உயர்ந்ததல்ல. ஆகவே கிராமங்களிலிருந்து

வந்து படிக்கும் மாணவர்கள் படிப்பு முடிந்து, கிராமங்களுக்குத் திரும்பிச்சென்றால், அந்த விளையாட்டுகள் விளையாடுவதற்கு தகுந்த வசதிகளாவது பணமாவது கிராமங்களிலிருக்கிறதா என்று கேழ்க்கிறோம். பட்டிணத்தில் படித்த கிராமவாசிக்கு, படிப்பு முடிந்தபின் இது களிமண்ணு செம்மண்ணு என்றுகூட தெரியாதிருப்பதை நாம் அநேக இடங்களில் பார்த்திருக்கிறோம். படித்த பின் மூட்டை தூக்குவதும் காய்கறி சாமான் வாங்குவதும், விவசாயவேலை செய்வதும்கூட கேவலமாய் விடுகிறது என்பதை அநுபவமாய் பார்க்கிறோம். இனிமேல்கொண்டு டாம்பீகத்தையும், வீண்படாடோபங்களையும் மூட்டைகட்டி வைத்துவிடுங்கள். சாதாரண எளிய வாழ்க்கையைக் கைக்கொள்ளுங்கள். எளிய வாழ்க்கை நடத்துவோனுக்கு என்றும் பயமில்லை.

வீரர்களின் சரித்திரங்களை படியுங்கள். பிரான்ஸ் தேசத்து வீரன் நெப்போலியன் போனபோர்ட், "ஆகாது என்பது என் அகராதியில் இல்லை" என்று சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? ஸ்விட்ஜர்லண்ட் தேச வீரன் வில்லியம் டெல், ரஜபுத்ர வீரர்கள் முதலியவர்களின் சரித்திரங்களையும், கைத்தொழில், விவசாய வியாபார நூல்களையும் வாங்கிப் படியுங்கள். நாவல்களில் எழுதியுள்ள கற்பனுகதைகளைப் படித்து அநேக வாலிபர்கள் ஒழுக்கம் தவறியதையும், கெட்டுப்போனதையும் பார்த்திருக்கிறோம். கிணறு வெட்ட பூதம்புறப்பட்ட கதைப்போல், பிற்கால வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போடுவான் வேண்டி, பள்ளியிலே பயிலும் மாணவர்கள், கெட்ட புஸ்தகங்களைப் படிப்பதால் பொருள் நஷ்டத்தை அடைவதோடு, திரேகத்தையும் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். பால்ய வயதில் உண்டாகும் நல்லுணர்ச்சியும், நன்நடவடிக்கையும்தான் கடைசி காலம் வரையில் நம்மனதில் பதிந்து விடுகின்றன. கெட்ட நாவல்கள் நம் வாழ்க்கையையே கெடுத்துவிடுகின்றன. மேல்நாட்டு வாலிபர்கள், மாணவர்கள் தங்களுக்கு ஒழிந்த நேரங்களில் என்ன செய்கிறார்கள்? தோட்டவேலை செய்தல், காய்கறிகள் பயிரிடுதல், பால் கறத்தல், கறந்தபாலை கடைகளுக்குக் கொண்டுபோய் விற்பனை செய்தல், கோழி

கள் வளர்த்தல், கால்நடைகள் வளர்த்தல், கைத்தொழில்கள் செய்தல் முதலிய பணம் சம்பாதிக்கும் வேலைகளைச் செய்கிறார்கள். நம்மில் படித்தவர்களில் சிலருக்கு மேற்படி வேலைகள் இழிவாகவும், கௌரவக் குறைவாகவும் தோன்றுகின்றன. என்னே அறியாமை! B.A.,M.A. படித்து பாஸ் செய்ய ஆயிரக்கணக்கில் செலவிட்டு 35, 40-ரூபாய் சம்பளம் வாங்கும் குமாஸ்தா வேலை சிறந்ததா? அல்லது ரூ. 20-ஆகிலும் சுதந்தரமாய் சம்பாதிப்பது நல்லதா? விவசாயத் தொழில் செய்து மாதம் 15-ரூபாய் சம்பாதிப்பது, அடிமைவேலை செய்து 1000-ரூபாய் சம்பாதிப்பதைக் காட்டிலும் மேலானது. இந்திய நாட்டில் பசுக்களை வளர்ப்பதற்கு எவ்வளவோ வசதிகள் யிருந்தும் நம்மில் அநேகர் ஸ்விட்ஜர்லாண்ட், டென்மார்க்கு தேசத்து டப்பிபாலை வாங்குகிறோம். படித்தவர்கள் பால்பண்ணைகளை வைத்தால், பால் வியாபாரத்துக்கு மதிப்பு உண்டாகி வியாபாரம் விருத்தியாகும். பாலை எவ்வளவு அதிகமாக ஜனங்கள் உபயோகிக்கிறார்களோ, அவ்வளவு அதிகமாக அவர்களின் திரேக வலிமையும் மனோவலிமையும் விருத்தியாகும். பணம், நிலம், காடு, வீடு முதலிய சகல வசதிகளும் உள்ள படித்தவர்களே அதிகமாக உத்தியோக வேட்டை யாடுகிறார்கள். ஏழையும் கைத்தொழில் செய்ய வசதியில்லாதவனும் ஊழியம் செய்து ஜீவனம் செய்ய வேண்டியதுதான். ஆனால் அவனைவிட எல்லா வசதிகளும் உள்ளவன் போட்டி போடுவதால் ஏழையின்பாடு திண்டாட்டமாய் விடுகிறது. படித்தபின் உத்யோக வேட்டையாடுவதைக் காட்டிலும் நமக்கு கொஞ்சம் வசதிகள் இருக்குமானால் கோழி வளர்த்தல், பால்பண்ணை வைத்தல், கால்நடைகள் வளர்த்தல் விவசாயவேலை, கைத்தொழில் முதலிய பலதொழில்களுக்கு படிப்பையும், சக்தியையும் உபயோகிக்க வேண்டுமென்பதே நம்விருப்பம்.

சகோதரர்களே, நம் தமிழ்நாட்டில் படித்த பட்டதாரிகள் எல்லாம் உத்யோகத்தையே விரும்புகிறார்கள். சில பட்டதாரிகள் மாத்திரம் மேற்படி வேலைகளில் ஈடுபடுவதால் பிரயோஜன மெதுவும் ஏற்பட்டுவிடாது. தேசத்தொண்டு செய்ய வசதிகள் இல்லாதவர்கள் மேலே

சொன்ன தொழில்களிலாவது கவனத்தை செலுத்த வேண்டுகிறோம். எந்தத்தொழிலும் ஜனங்களின் வாழ்க்கை தரம் உயர்ந்தாலன்றி விருத்தியாகாது. அக்காரணம் பற்றியே நம்தேசத் தலைவர்கள் எல்லோரும் தேசவிடுதலை வேலைகள் செய்து வருகிறார்கள். பானைக்கு அடியிலே ஓட்டையை வைத்துக்கொண்டு பொழுதெல்லாம் தண்ணீர் ஊற்றினாலும் அப்பானை நிறையுமா? பாமரமக்கள் தாங்கள் சம்பாதிக்கும் சுல்பவரும்படியை மதுவுக்கும், அயல் நாட்டு சாமான்களுக்கும், துணிகளுக்கும் கோடிக்கணக்கில் செலவிட்டுக் கொண்டிருக்கும்படி விட்டுவிட்டால் நம் நாட்டு கைத்தொழில்கள் விருத்தியாகுமா? இந்தியர்கள் கள்ளு சாராயத்துக்கு சிலவிடும் 80-கோடியும் அன்னிய துணிகளுக்கு சிலவிடும் 50-கோடி ரூபாயும் அந்நியநாட்டு சிகரெட்டுகளுக்கு சிலவிடும் $4\frac{1}{2}$-கோடி ரூபாயும் அயல் நாட்டு சர்க்கரைக்கு சிலவிடும் 14-கோடி ரூபாயும் இன்னும் பலவித வாசனை திரவியங்கள், ஷோக்கு சாமான்கள், கண்ணாடி பீங்கான் சாமான்கள், முதலிய அநேகவித சாமான்களுக்கு அயல்நாடுகளுக்கு ரூபாய் சேரும் கோடிக்கணக்கான பணமும் நம்நாட்டிலே தங்கவேண்டுமானால், இந்திய ஏழைமக்களிடத்திலே, தங்கவேண்டுமானால், வாலிபர்கள் ஒவ்வொருவரும் தீவிரமாக சுதேச விரதம் கொள்ளல் வேண்டுமென்று நாம் பன்முறையும் சொல்லுகிறோம்.

---

## மது விலக்கு ஏன்.

ஐயா உங்கள் கிராமத்தில் அல்லது தெருவிலுள்ள ஒரு எளியவன் வீடு தீ பிடித்துக்கொண்டால் நமக்கென்ன என்று வாளா யிருக்கமுடியுமா? நம்மவீட்டுக்கும் நெருப்பு எங்கு பற்றிக்கொள்கிறதோ என்று நாமும் நெருப்பு பிடித்த வீட்டை அணைக்க முயலுகிறோம். நம் கிராமத்தில் கடைசி வீட்டுக்காரனுக்கு பிளேக் வியாதி கண்டால் உடனே நமக்கு அந்த வியாதி எங்கு தொத்திக் கொள்ளுகிறதோ என்று பயந்து ஊரை காலிசெய்து விடுகிறோம், அல்லது தக்க பரிகாரம் தேடுகிறோம். அதுபோல் ஏழை

மக்கள் அரும்பாடுபட்டு சம்பாதிக்கும் அற்பகூலி பணத்தையும், அவர்கள் திரேகத்தையும், ஒழுக்கத்தையும் நாசமாக்கும் கள் சாராய எமனுக்கு சாவுமணியடிக்க முயலுவது ஒவ்வொரு சுயமதிப்புள்ள வாலிபனும் தன் கடமை என்று உணர்தல் வேண்டும். குடியானவனிடத்தில் பணம் தங்குமானல் அவன் தன் பெண்ஜாதிக்கு ஒரு ஜதை கம்கல் செய்வான், சில்லரை நகைகள் செய்வான். இப்பொழுது வேலையில்லையே என்று தவிக்கும் எத்தனையோ பொன் வேலைகாரருக்கு வேலை கிடைக்கும். குடியானவன் பணம் கள்ளுக்கும் சாராயத்துக்கும் சிலவாகாமல் நின்ருல் அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் பல சொக்காய்களும், துணிகளும் தேவையாகும். எத்தனையோ தையல்காரர்களுக்கும், நெசவுகாரர்களுக்கும் வேலை கிடைக்கும். அவனுக்கு குடை வேண்டியிருக்கும். குடைகள் செய்யும் தொழிற்சாலைகள் பல நம் தேசத்தில் ஏற்படும். தச்சன், கருமான், குயவன், வண்ணன் முதலிய பலருக்கும் நல்ல வருவாய் கிடைக்கும். குடியானவனுக்கு சாப்பாட்டுக்கும், சிலவுக்கும் சௌக்கியமானல் படிப்பு விருத்தியாகும். எத்தனையோ பத்திரிகைகளும், புத்தகங்களும் அப்போது தேவையாகும். சுருங்க கூறின் மதுவிலக்கைப்போல் கைமேல் பலனளிக்கும் திட்டமும் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டமும் வேறே கிடையாது என்று சொல்லலாம். ஆகையால் நாம் என்ன செய்தல் வேண்டும்? நமக்கு சுயராஜ்யம் வந்தால் கள்ளு-சாராயக் கடைகள் கண்டிப்பாய் மூடப்படும். ஆனல் நாம் அமெரிக்காவைப்போல் காயிதத்தில் சட்டம் செய்ய விரும்பவில்லை. உண்மையிலேயே பூரண மதுவிலக்கை விரும்புகிருேம். அரசாங்கத்தார் கடைகளை மூடுகிற வரையில் வாலிபர்கள் தீவிரமாய் முன்வந்து சாத்வீகமாயும், அமைதியாயும் கள்ளு-சாராயக்கடைகளின் முன் நின்று மறியல் செய்வதே எல்லாமுறைகளைக் காட்டிலும் சிறந்ததென்று மஹாத்மா சொல்லுகிருர். அதுபோலவே இந்தியாவெங்கும் வெகு மும்முரமாய் மறியல் நடைபெற்று வருகிறது. ஆனல் இப்பொழுது நடைபெறும் மறியல் போதாது என்பதே நம் அபிப்பிராயமாகும்.

ஏதோ ஒன்றிரண்டு தாலூக்கா தலை நகரங்களிலும், ஜில்லா மாகாண தலை நகரங்களிலும் மட்டும் மறியல் நடைபெறுவது போதாது. கள்ளு சாராயக்கடைகள் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் மறியல் நடைபெறவேண்டும். மறியல் செய்யும்போது மனம், வாக்கு காயம் மூன்றிலும் அஹிம்ஸையையே அநுசரித்தல்வேண்டும். பிறர் நம்மை தூஷித்தாலும், அடித்தாலும் கூட பொருத்துக்கொள்ள வேண்டும். என்னடா நாம் ஆண்பிள்ளை யல்லவா ஒருவன் தூஷிக்கவும் அடிக்கவும் நாம் சும்மா இருப்பதா என்றெண்ணுவது மதியீனமாகும். நண்பர்களே! என்றும் சத்தியத்துக்கும், தியாகத்துக்குமே வெற்றியுண்டாகும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் அஹிம்ஸா தர்மத்தை கடைபிடித்தொழுகி, சாத்வீகமான மறியல் செய்து வருவது இப்போது நாம் செய்ய வேண்டிய வேலையாகும். ஜாதிக்கட்டுப்பாடு என்னும் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வாருங்கள்.

எந்த ஜாதியானும், மதஸ்தனும் தான்செய்யும் எல்லா சுப, அசுப, காரியங்களுக்கும், சாஸ்திரத்தை அநுசரிக்கிறன். சாஸ்திரத்தை அநுசரிக்காதவன் எவனும் இல்லை.

இந்துக்களில் அநேகர் சித்திரைமாதத்தில் புதிய மழைகள் பெய்தால் தங்கள் நிலத்தை உழுவதற்கு கூட சாஸ்திரத்தை அநுசரிக்கிறார்கள். சாஸ்திரங்களிலே குடிப்பது பாவம், அவன் முகத்தை பார்ப்பதும், தொடுவதும், பேசுவதும் கூட பாவம் என்று எழுதியிருக்கிறது. நல்ல காரியங்களுக்கு மட்டும் சாஸ்திரத்தை அநுசரிப்பது போல் ஒருவனுடைய அந்தஸ்து, பணம், ஒழுக்கம், நாணயம் முதலிய எல்லாவற்றையும் நாசமாக்கும் கெட்ட கள் சாராயம் குடிக்கும் ஜனங்களிடத்தில் நாம் ஏன் இந்த மதக்கோட்பாடுகளை சொல்லி ஜாதியினின்று நீக்கக் கூடாது? ஜாதிக்கட்டுபாடுகள் தேசமெங்கும் பரவியிருக்கின்றனவென்பது வாஸ்தவமேயாயினும், ஜாதிக்கட்டுப்பாடுகள் பல நாள்கள் வரையில் நிற்பதில்லை என்பதை நாம் அநுபவ மூலமாய் பார்த்திருக்கிறோம். கள்ளுக் கடைக்காரர்கள் பணக்காரர்களாகவும், செல்வாக்குள்ள

வர்களாகவும் இருப்பதால் லஞ்சம் கொடுத்தும், பலவித உபாயங்களாலும் கட்டுப்பாட்டை குலைத்திருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஆனால் நம்மிடம் ஒரே உறுதியும், காரியத்தில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருக்குமேயானால் பணத்தாலும், வேறு உபாயங்களாலும் கட்டுப்பாட்டை குலைக்க முடியாது. மதுவிலக்கு வேலையை தலைவர்களால் மாத்திரம் செய்துவிட முடியாது. வாலிபர்களே முன்வர வேண்டும். இவ்விஷயத்தில் சேலம் குகையில் உள்ள வாலிபர்களின் ஊக்கமும், வீரமும் போற்றற்பாலது. அன்னாரது அரிய வேலைகளை தமிழ் நாடு பின்பற்றவேண்டும். சேலம் சுப்பிரமணியம் அவர்களும், தொண்டர்களும் கூர்ஜரதேச வீரர்களோடு போட்டி போடும் மாதிரியாக மதுவிலக்கு வேலையில் ஈடுபடுகிறார்கள். எழுமின் ! எழுமின் ! தேசவேலையில் ஈடுபட எழுமின் !

---

## தீண்டாமை விலக்கு.

தீண்டாமை விலக்கு விஷயமாய் தமிழ்நாட்டு தலைவர்க்ள் சரியான முயற்சிகள் எடுத்துக் கொள்ளாதிருக்கிறார்கள் என்பதே நம் அபிப்பிராயமாகும். வாய் வேதாந்தம் பேசி பயனில்லை. இரண்டுமணி நேரம் ஓயாபிரசங்கம் செய்வதைக்காட்டிலும் ஐந்து நிமிஷம் காரியங்களை அநுஷ்டானத்தில் காட்டுவதே சிறந்ததாகும். தமிழ் நாட்டுத்தலைவர்கள் பெரும்பாலோர் பிராமணர்களானகையால், தீண்டாமை விலக்கு வேலையில் தீவிரமாய் இறங்க பின் வாங்குகிறார்கள். அப்படி அவர்கள் தீவிரமாய் முன் வந்தாலும் அவர்கள் ஜாதியாருக்கும், பண்டிதர்களுக்கும் பயப்பட வேண்டியிருக்கிறது. பிராமணத் தலைவர்கள் தான் செய்யவில்லையே என்று பிராமணரல்லாத தலைவர்களும், வாலிபர்க்ளும் என்ன செய்தார்கள். காரியத்தில் ஒன்றுமே காணோம். பட்டணங்களிலே இருக்கும் தலைவர்களே, கிராமத்துக்குப் போய் பாருங்கள் ! அங்கே தரித்திரமும், அறியாமையும், ஜாதிக் கொடுமைகளும் தலை விறித்தாடுகின்றன. தீண்டாதார் நல்லவேஷ்டி கட்டக்கூடாது. கோயிலுக்

குள்ளே வரக்கூடாது. மேல்ஜாதியாரை கண்ட விடமெல்லாம் கைகட்டி வாய் பொத்தி கும்பிடு போடவேண்டும். கிராமங்களில் அநேகமாய் ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், கோயில் தர்மகர்த்தாக்கள் எல்லாம் பிராம்மணரல்லாதார் தானே. கணக்குபிள்ளை வேலையும், வாத்தியார் வேலையும் தானே பிராம்மணன் பார்க்கிறான். இவ்வளவு செல்வாக்குள்ள பிராம்மணரல்லாதார் எத்தனை குளங்களில் ஆதி திராவிடர்களை அநுமதிக்கிறோம் ? எத்தனை கோயில்களில் அநுமதிக்கிறோம் ?

ஜஸ்டிஸ் கக்ஷியால் தீண்டாதாருக்கு ஏதோ நன்மைகள் வந்துவிடுமென்று நம்பியிருந்தோம். ஜஸ்டிஸ்கக்ஷி உத்யோக வேட்டை கக்ஷியாக இருக்கிறதே ஒழிய தீண்டாதாருக்கும் பாமரமக்களுக்கும் இக்கக்ஷியால் உண்டான நன்மைகள் நமக்கு தெரியவில்லை. பட்டிணங்களில் பொதுக்கூட்டங்களிலும், பிரசங்கமேடைகளிலும், மகாநாட்டுப் பந்தல்களிலும் தீண்டாமை இல்லை என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் தீண்டாமை கிராமங்களில் அப்படியே தானிருக்கிறது. நம்நாட்டில் கிராமங்கள் அதிகமாயிருக்கிறதினால், எந்த சீர்திருத்தமும் கிராமத்துக்கே அதிகம் தேவை. கிராமங்களில் பிராமணர்களுக்கு செல்வாக்குமில்லை. அப்படியிருந்தாலும் கொஞ்சம்தானிருக்கும். பிராமணர்கள் தீண்டாதாரை கைதூக்கிவிட உழைப்பதைவிட, பிராமணரல்லாதாரே அதிகமாக உழைக்கவேண்டும். சென்னை மாகாணத்தில் வரிசெலுத்துவோரும், நிலச்சுவான்தார்களும் முக்கால்பாகத்துக்குமேல் பிராமணரல்லாதார்களே. நம்முடைய நிலம், காடுகளில்தான் அவர்கள் அதிகம் உழைக்கிறார்கள். நமக்குதான் அவர்கள் க்ஷேமத்தில் அக்கரையிருக்கவேண்டும். தீண்டாதாரை பிராமணரல்லாதார் தங்கள் வீடுகளுக்குள்ளே அநுமதித்து சமத்துவம் காட்டினால், பிராமணர்கள், பிராமணரல்லாதாரை பகிஷ்கரிக்கமுடியாது. ஆதி திராவிடர்கள் அசுத்தமாய் இருக்கிறார்கள் என்றால் கிராமத்தில் உள்ள நூறு கிணறுகளிலும் இடமில்லை என்றிருக்கும்போது என்ன செய்வார்கள். படிப்பில்லை என்றால் தீண்டாதான் படித்தால் படிக்கமாட்டான் என்று சொல்லுகிறோம். சகோதரர்

களே: தீண்டாதார் இதுவரையிலும் நமக்கு அடிமைகளா யிருந்தது போதும். இனிமேலாகிலும் அவர்களுக்கு சுதந்தரம் கொடுங்கள். நம்மிடையே ஒருவகுப்பாரை அடக்கிவைத்துக்கொண்டும் எந்தவிதத்திலும் அபிவிருத்தி யடையாமல் தடை செய்துக்கொண்டும், வெள்ளைக்காரனை சுயராஜ்யம்கொடு என்று நாம் கேழ்க்கிறோம். தீண்டாமை என்பது பெரிய பாவமாகும். எளிய தீண்டாதானை அன் புடன் நேசிக்கிறதைக்காட்டிலும் வேறு தர்மம் என்ன இருக்கிறது ? தீண்டாதாரை கொடுமைப்படுத்தும் இந்துக் களைக் குறித்து டாக்டர் வரதராஜுலு நாயுடு " தமிழ்நாடு " பத்திரிகையில் எழுதியுள்ளதை கவனிக்க வேண்டுகிறோம்.

" எம்மதத்தினராயினும், தம்மதத்திலிருப்போரைக் கொடுமைப்படுத்தினால் அவர்களை எதிர்த்து சுயமதிப்பை நிலைநிறுத்துவதே வீரர்களுக்கு அழகாகும். உயர் ஜாதி இந்துக்கள் தீண்டாதாருக்கு செய்திருக்கும் துன்பங்கள் மலைபோல் குவிந்திருக்கின்றன. அதுபோதாதென்று மறு படியும் அக்கிரமங்கள் செய்ய முற்பட்டிருப்பது மானக் கேடாகும். ஆனால் உயர் ஜாதியாருடைய கட்சி ஜெயிக்காதென்பதைமட்டும் ஜாதி இந்துக்களுக்கு தெரி வித்துக்கொள்ளுகிறோம். தீண்டாதார் முன்னேற்றத்தை தடுக்க இனியாராலும் முடியாது. தெய்வகடாக்ஷம் அவர்கள் பக்கமிருக்கிறது. நீதி அவர்களுக்கு பக்கதுணை நிற்கின்றது. காலச் சக்கரத்தின் வேகம் ஆதிதிராவிடர் களுக்கு ஆதரவாயிருக்கின்றது. தாழ்ந்தோர் தலை எடுப் பதை தடுப்பவர்கள் காலச் சக்கரத்தில் நசுக்குண்டு போ வார்கள் என்பதை ஜாதித் திமிர்கொண்ட இந்துக்கள் அறியவேண்டுகிறோம் "

மாரிமுத்து என்னும் பறயன் பறயனுயிருக்கும்போது கிணற்றிலிறங்கவும், கோயிலுக்குவரவும், வீடுகளுக்குள் வரவும், தொடவும் உரிமையில்லை. ஆனால் அதே பற யன் கிறிஸ்துவ மதத்தைத் தழுவி ஜேம்ஸ் மாரிமுத்து என்ற பெயரோடு படித்து பாஸ் செய்து கலெக்டர் உத்தி யோகத்துக்கு வந்துவிட்டால் நாம் அவனுக்கு மண்டியிட்டு சலாம்போட்டு, பூமாலைபோடுகிறோம், உபசரிக்கிறோம்.

அல்லது அதே பறையன் இஸ்லாமிய மதத்தைத் தழுவி அப்துல்காதர் என்னும் பெயர் வைத்துக்கொண்டால் அவன் கிணற்றிலிரங்கி தண்ணீர் எடுக்கவும், நம்மை தொடவும் அநுமதிக்கிறேம். என்னே அறியாமை! கிரிஸ்துவ மதத்திலும், இஸ்லாமிய மதத்திலும் ஒருவனுக்கு இருக்கும் உரிமைகள் இந்துமதத்தில் இல்லையானல் அந்த மதம் அழிந்துபோவதே மேலாகும். ஒருவனை ஒருவன் தாழ்மையாய் நடத்துவது தானழிந்துபோவதற்கே யாகும். கடவுளுக்கு பறையன், பிராமணன், நாயுடு, முதலியார் என்னும் வித்தியாசங்கள் இல்லை. அவருக்கு எல்லோரும் குழந்தைகளே. தகப்பன் தான்பெற்ற குழந்தைகளில் ஒருவனை ஒரு மாதிரியாகவும் இன்னொருவனை வேறுமாதிரியாகவும் நடத்தமாட்டான். கடவுளுக்கும் இதுவே. தீண்டாதாருக்கு கோயில்களில் உரிமையில்லையானல் அக்கோயில்கள் அழிந்துபோவதே மேல். நம் சகோதரனுக்கு உரிமையில்லாத கோயில்களுக்கு போகாதீர்கள். எல்லோரும் சரிசமமாய் பக்திசெய்து நல்வழியடைய கோயில்களே தவிர ஒரு ஜாதியாருக்கு மட்டும் கோயில்கள் சொந்தமல்ல. நாம் பிராமணரல்லாத கோயில்கள் தர்மகர்த்தாக்கள் எத்தனைபேர் தீண்டாதாருக்கு கோயில்களில் உரிமை அளிக்கப்போகிறர்கள் என்பதை இனிமேல் பார்க்கப்போகிறேம். மஹாத்மா காந்தியவர்கள் "தீண்டாதார் நுழைய உரிமையில்லாத கோயில்கள் சுயராஜ்ய கவர்மெண்டால் பறிமுதல் செய்யப்படும்" என்று சொன்ன வார்த்தைகள் பொன்னேபோல் போற்றத்தக்கது. போனது போகட்டும். இனிமேலாகிலும் தீண்டாதாரை கைதூக்கிவிட்டு நம்மைப்போல் சகலவிதத்திலும் முன்னேற்றமடைய செய்யவேண்டியது வாலிபர்கள் கடமையாகும்.

---

## சுதேசி விரதம்.

தமிழ்நாட்டு வாலிபர்கள் சுதேசியத்தை ஆதரிக்க வேண்டுமென்று பலதடவை வற்புறுத்துகிறோம். நம் நாட்டுத் தொழில்கள் விருத்தியாகவேண்டுமானால், விவசாயம் செழித்தோங்கவேண்டுமானால் ஒவ்வொரு வாலிபனும் சுதேசி விரதத்தை அநுஷ்டிக்கவேண்டும். சுதேசி விரதம், என்பது நம்நாட்டின் முதலைக்கொண்டு, நம் நாட்டுமக்கள் செய்யும் சாமான்களை வாங்குவதேயாகும். அன்னியநாட்டு துணிகளுக்கு வருஷம் ஒன்றுக்கு நாம் 60-கோடி ரூபாய் கொட்டுகிறோம். வருஷத்தில் ஐந்துமாதகாலம் வேலையற்றுக்கிடக்கும் குடியானவனுக்கு கைராட்டை ஒன்றேவேலை கொடுக்கும் சாதனமாகும். நாம் ஒவ்வொருவரும் கதர் தான் கட்டுவோம் என்று முடிவு செய்துக்கொண்டால் அன்னியநாட்டுத்துணி ஒரு கஜம்கூட நம்நாட்டில் விலையாகாது. படித்த வாலிபர்கள் அநேகர் நம்நாட்டு சீதோஷ்ண ஸ்திதிக்கு ஒத்துக்கொள்ளாத அயல்துணிகளின் மேல் ஆசைகொள்ளுவது என்னே அறியாமை. இன்னுமா சீமை துணிகளின்மேல் மோகம். நம்நாட்டு சீதோஷ்ண ஸ்திதிக்கு ஒரு வேஷ்டியுடுத்தி, ஒரு சொக்காய் போட்டுக்கொண்டால் போதுமானது. சீதள தேசவாசிகள் தான் சொக்காயிக்குமேல் சொக்காய்கள் போட்டுக்கொள்ள வேண்டும். அயல்நாட்டார் தங்கள் நாட்டின் சீதோஷ்ண ஸ்திதிக்கு தகுந்த ஆடைகளை அணிந்து பழக்கமாய் விட்டபடியால் நம்நாட்டுக்கு வந்தால்கூட அதுமாதிரியாகவே அணிந்துகொள்ளுகிறார்கள். அம்மாதிரி நாம் அணியவேண்டிய அவசியமில்லை. கடுமையான வெய்யிலிலே இடுப்பில் மாத்திரம் ஒருமெல்லிய வேஷ்டியை கட்டிக்கொண்டு, உடலுக்கு பனியன், ஷர்டு, ஷர்டுமேலே ஒரு டுவிட் அல்லது நேவிபுளு கோட்டு போட்டுக்கொள்வது தற்காலம் நாகரீகக் குறைவாகவே கருதப்படுகிறதென்பதை வாலிபர்கள் உணர்தல்வேண்டும். நல்லவேளையாக மஹாத்மாகாந்தியால் உயர்ந்த ஆடைகளுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. ஏழைகளும், தனவந்தர்களும் இடுப்பிலே கதர் வேஷ்டியும், உடலுக்கு சாதாரண கதர் சொக்காயும் தலை

யிலே குல்லாயும் அணிந்துகொள்வது தற்கால நாகரீகமா யிருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். சாதாரண உடை உடுத்துவதால் எவ்வளவோ பணம் மீதியாகிறது. கதர் துணிகள் சற்று விலையில் உயர்ந்திருந்தாலும் நாள் பட உழைக்கக்கூடியது. பரிசுத்தமானது, விலை மலிவான அயல்நாட்டு துணிகள் சீக்கிரம் கிழிந்துபோகக்கூடியது. அதுவும் இப்போது பம்பாய் மாகாணத்தில் தொடுவாறற்றுக்கிடந்த துணிகள் சென்னை மாகாணத்துக்கு வருவதால், அந்ததுணிகள் மக்கலாகவே தானிருக்கும். நீடித்து உழைக்காது. கதர் உடுத்துவோன், தான் கதர்துணிக்கு கொடுக்கும் ஒவ்வொரு தம்படியும் ஏழைக்குடியானவனுக்கே போய் சேருகிறதென்று சந்தோஷப்படவேண்டும்.

சர்க்கரைக்கு வருஷம் ஒன்றுக்கு அயல்நாடுகளுக்கு 14-கோடி ரூபாய் போய்சேருகிறது. நம்நாட்டில் கரும்பு விளைவதற்கும் சர்க்கரை செய்வதற்கும் எவ்வளவோ வசதிகள் இருந்தும் அயல்நாட்டு சர்க்கரையை நாம் உபயோகிப்பதால் நம்நாட்டு வெல்லத்துக்கும் நாட்டுச் சர்க்கரைக்கும் விலையில்லாமற் போகிறது.

நாட்டுவெல்லத்தை உபயோகிப்பதே நாம் விவசாயிகளுக்கு செய்யும் பேருபகாரமாகும். வெல்லம் சாப்பிட்டால், அல்லது வெல்லத்தை காப்பியில்போட்டு சாப்பிட்டால், சிலர் தங்கள் திரேகத்துக்கு ஒத்துக்கொள்ளுகிறதில்லை என்று சொல்லுகிறார்கள். வங்காள டாக்டர்களை கேட்டுப்பாருங்கள். வெல்லம் சர்க்கரையைவிட சிறந்தது. உடம்புக்கு நல்லது. புஷ்டியை உண்டாக்கக்கூடியது. நம் முன்னோர்கள். வெல்லம் சாப்பிட்டகாலத்தில் நம்மைப் போல் பலவீனர்களாயிருக்கவில்லை. காப்பி கிளப்காரர்களே! காப்பி சாப்பிடுவோர்களே! இந்திய விவசாயியை காப்பாற்றுங்கள். சர்க்கரைக்கு ஜாவா முதலிய நாடுகளுக்கு 14-கோடி ரூபாய் நம் நாட்டைவிட்டுப் போகிறது. நமக்கு ஒழிவு ஏற்படும்போதெல்லாம் இந்த சங்கதிகளை பலருக்கும் சொல்லி எச்சரிக்கவேண்டும்.

அன்னியநாட்டு சிகரெட்டு பிடிப்பதால் நம் நாட்டுப் பணம் 4½-கோடி ரூபாய் அயல்நாடுகளுக்கு போகிறது.

சிகரெட்டுகளுக்கு பதிலாக பீடி உபயோகித்தால் என்ன ? பீடிகள் அதிகம் செலவானுல் எத்தனையோ இந்தியபீடி வியாபாரிகளும் பீடி சுருட்டுவோரும் க்ஷேமமாய் பிழைப்பார்கள். கல்கத்தாவிலே தற்போது பீடியே அதிகமாக உபயோகப்படுகிறது. இவைகளைப்போன்று, கண்ணுடி சாமான்கள், வாசனை திரவியங்கள் சோப்புகள் பெல்ட்டுகள் ரப்பர் பூட்சுகள் முதலிய அநேக சாமான்களுக்கு அயல்நாடுகளுக்கு போகும் பணம், நம் நாட்டிலேயே நிற்க வேண்டுமானுல் நாம் வாங்கும் சாமான் சுதேச சாமானு என்று பார்த்து வாங்கவேண்டும்.

---

## கிராமங்களில் அநியாய வட்டி.

யுவர்களே! கிராமங்களுக்குப்போய் பாருங்கள். கிராமவாசிகள் படிப்பில்லாதவர்களாகவும், தரித்திரர்களாகவும், கடனாளிகளாகவும் இருப்பதால் அவர்களால் எந்த நிர்மாண வேலையும் செய்ய முடியாமலிருக்கிறது. கிராமவாசிகள் பிறரை உபசரிப்பதிலும், நேசிக்கிறதிலும், உதவி செய்வதிலும் பேர்போனவர்கள். கடன்பட்டவர்களிலும் உலகத்திலேயே பேர் போனவர்கள் இந்திய கிராமவாசிகள் தான். கிராமங்களிலேயிருக்கும் வட்டி விகிதத்தை நீங்கள் கேட்பீராயின் திடுக்கிட்டுப்போவீர்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு போகம் அல்லது ஆறு மாதத்துக்கு (ஒருவள்ளம்) அல்லது பட்டிணம் படி 2½ சோளம் அல்லது நெல் வட்டியும் ஒரு ரூபாய்க்கு வாரம் ஒன்றுக்கு ஒரு அணு வட்டியும் சாதாரணமாயிருக்கிறது. பெரிய தொகைகளுக்கு 100-க்கு மூன்று வட்டிக்கு கம்மியில்லை. இந்த அநியாயவட்டி கொடுக்கும் குடியானவன் எப்படிவிருத்தியாக முடியும். ஒரு வியாபாரியிடத்தில் 100, 200 கடன் வாங்கிவிட்டால், வியாபாரிக்கு தலைப் பிள்ளையைப்போல் உழைத்து வட்டி கட்டவேண்டிய நிலையில் குடியானவன் என்ன மிச்சம் செய்ய முடியும். அநியாய வட்டி வாங்கும் லேவாதேவிக்காரர்களே! சுயராஜ்ய கவர்ன்மெண்டு வந்தால் நீங்கள் இம்மாதிரி செய்ய முடியாது. நியாயமான

வட்டிக்கு லேவாதேவி செய்வதை யாரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். அநியாய வட்டிக்கு பணம் கடன்கொடுத்து குடியானவனை கோர்ட்டுக்கும் கச்சேரிக்கும் இழுத்து அவனை பாழாக்குவதால் நம்மை நாமே பாழ்படுத்திக் கொள்ளுகிறோம். குடியானவர்கள் தங்கள் நிலங்களை யிழந்துவிட்டால், அந்நிலங்களை மறுபடியும், பணக்காரன் அவர்களுக்கேதான் சாகுபடி செய்யவிடுகிறான். தனக்கு சொந்தமில்லாத நிலத்தை குடியானவன் செம்மையாய் உழவடை செய்யமாட்டான். யார் எப்படிப்போனாலும் என் குத்தகையை கொடுத்துவிடு என்று சொல்லும் நிலத்தின் சொந்தக்காரன் தொந்திரவாலும், பலவித கொடுமைகளாலும், எத்தனையோ கிராமங்களில், நிலத்தை சாகுபடி செய்ய குடியானவர்கள் முன்வராததால் பணக்காரன் நிலங்களெல்லாம் உழுவாறற்று இருப்பதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். வாலிபர்களே ! அநியாய வட்டிக்கு பணம் கொடுப்பவர்களை நாம் கெஞ்சினாலும் இணங்கமாட்டார்கள். ருசிகண்ட பூனை சும்மாயிருக்குமா? அநியாய வட்டிக்கு பணம் வாங்கவேண்டாமென்று குடியானவர்களுக்கு அடிக்கடி நாம் எச்சரிக்கை செய்தல்வேண்டும். கூடுமானால் அப்படி கிராமத்தில் அநியாயமாய் பணம் சம்பாதிப்பவனை பகிஷ்கரிக்க வேண்டுமென்பதே நம் அபிப்பிராயம்.

---

## தேசபக்தி அல்லது வாலிபர் கடமை.

தேசபக்தியில்லாத மனிதன், மனிதனல்லாமல் வேறு ஏதோ உருவம் என்றுதான் சொல்லவேண்டும். தேசபக்தியிலே அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும், முக்கியமாக பிரிட்டிஷ்காரர்களும் சிறந்தவர்கள். அமெரிக்காதேச இளைஞர்கள் அந்நாட்டை விடுவிப்பான் வேண்டி செய்த தியாகத்தை உலகமே போற்றுகிறது. நெப்போலியன் போனபோர்ட் இங்கிலாந்தை ஜெயிக்க பெரும்படையுடன் வந்த காலத்து "எங்கள் இங்கிலீஷ் (கால்வாயை)க்கூட கடக்க விடோம். பிரஞ்சுகாரருக்கு அடிமையாய் இருப்பதை

விட இங்கிலாந்து பூராவும் அழிந்துபோவதே மேல்" என்று இங்கிலீஷ் வாலிபர்கள் அக்காலத்தில் வீரமுழக்கம் செய்து இந்திலாந்தை பிரஞ்சுக்காரர் அணுகாதபடி காத்தார்கள். இவர்களுடைய வீரத்தையும், தீரத்தையும் என்னென்றெழுதுவது. நாம் ஆங்கிலேயரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவைகள் அநேகம் இருக்கின்றன. பூட்ஸ் அணிவது, கிராப் வெட்டிக்கொள்வது, நாகரீகமாயிருப்பது போன்றவைகளை மட்டும் பின்பற்றி பிரயோஜனமில்லை. அவர்களிடமிருக்கும் தீரம், தியாகம், வீரம், காலந்தவறுமை, தலைவர்களுக்கு கீழ்படிதல், வீடுகளையும், வீட்டைச் சுற்றிலும் அலங்காரமாயும், சுத்தமாயும் வைத்தல் முதலியவைகளையும், அவர்களிடையேயிருக்கும் கட்டுப்பாட்டையும் நாம் பின்பற்றுதல் வேண்டும். ஐரோப்பிய நாடுகளிலே நம் நாட்டில் நடக்கும் மதுவிலக்கு இயக்கம்மாதிரி ஒரு இயக்கம் நடைபெற்று அரசாங்கங்கள் கள்ளு சாராயக்கடைகளை மூடாமல் மௌனம் சாதித்தால் நம்மைப்போல் ஐரோப்பியர்கள் சும்மா இருப்பார்களா? நம் நாட்டைப்போல் துர்பாக்கிய நாடு உலகிலேயே கிடையாது. ஜாதிப் பிணக்கு, சமயப் பிணக்கு, மேல்ஜாதி, கீழ்ஜாதி, உத்யோகஸ்தன், சாதாரண மனிதன், அந்தக்கக்ஷி, இந்தக்கக்ஷி, சலாம்போடும் கக்ஷி, சண்டையிடும் கக்ஷி என்னும் பிளவுகளிலேயே பிரிடிஷ் அரசாங்கத்தின் வேர்கள் ஓடி பிடித்துக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டு வாலிபர்கள் இனிமேல்கொண்டு ஜாதி சமயப்பற்றுகளை தொலைக்க கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும். கடவுளை கும்பிடவேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. கடவுளை கும்பிடுமிடத்தில் ஜாதி தலைகாட்டக்கூடாது என்பதே நம்வாதம். தேசபக்தி என்பது தன்னால் தேசத்தை எவ்வளவுதூரம் முன்னுக்கு கொண்டுவரமுடியுமோ அவ்வளவுதூரம் சுயநலமற்று தேசசேவை செய்வதேயாகும். தேசபக்திக்கு ஒரு வறையரையில்லை. பரம ஏழைமுதல் பணக்காரன் வரையில் தேசபக்தியில் ஈடுபடலாம். தேசபக்தி என்பது தேசத்தை பூஜிப்பதுமட்டுமன்று, விருத்திசெய்வதும், தன் உயிரைக் கொடுத்தாகிலும் தேசத்தை காப்பாற்றுவதாகும். வாலி

பர்களே! தூக்கம் வேண்டாம். சுயநலப்பேயை ஓட்டிவிடுங்கள். எல்லோரும் நம் சகோதரர்களே. தோள்தட்டி வாருங்கள். தேசத்தை சகல துறைகளிலும் விருத்திக்கு கொண்டுவரவேண்டிய பொருப்பு நம்மை சார்ந்திருக்கிறது. சாந்தமூர்த்தியாம் மஹாத்மா காந்தியவர்களின் திருவாக்கை சிரமேல்கொண்டு, சாத்வீகமாயும் அமைதியாயும், மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, கதர் அபிவிருத்தி முதலிய பலதேச நிர்மாண வேலைகளில் தீவிரமாய் ஈடுபட்டு தேசத்தை முன்னுக்கு கொண்டுவருவது தமிழ்நாட்டு வீர வாலிபர்களின் கடமையும், தேசபக்தியுமாகும்.

கேரள மாணவர் மகாநாட்டிலே தலைமைவகித்து, வாலிபர்களுக்கு கே. எப். நரிமன் செய்த பிரசங்கத்தின் ஒரு பாகத்தை கவனியுங்கள் :—

"யுவர்கள் செய்யவேண்டிய வேலையை சுருக்கி கூற விரும்புகிறேன். மானிடரது விடுதலையே அவர்களது வேலையாகும். யுவர்கள் எல்லாத் தடைகளையும் போக்கவும், பழைய சம்பிரதாயங்களை மீறவும், வைதிகர்களையும், அன்னிய அதிகாரத்தையும் கண்டிக்கவும், சமூகத்திற்கு பலஹீனத்தை யுண்டாக்கும் பழக்க வழக்கங்களை போக்கவும் வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இது சாதிக்க முடியாத காரியம்போல் தோன்றுகிறது. நம்பிக்கையும், தைர்யமும், கட்டுப்பாடும், ஒருமித்த முயற்சியும்கொண்டு வேலைசெய்தால் சமாளிக்க முடியாதென முதலில்தோன்றும் தடைகளையும் சமாளிக்கலாம். முடியாதென்ற பதம் முட்டாள்களின் அகராதியிலேயே காணப்படும். யுவர்களால் ஆகாதது ஒன்றுமில்லை. இவ்வேலையை சுலபமாக செய்வதற்காகவே ஒவ்வொரு பிரச்சினையாக மேற்கொள்ள வேண்டும்.

தேசத்தின் பூரணமான ராஜீய விடுதலையைப்பெற்றுவிட்டால் மற்றுமுள்ள பல கேடுகளும் அடியோடு நீங்கிவிடும். இதனால் இம்மாகாண வாலிபர்கள் இந்நாட்டிற்குப் பூரண சுயராஜ்யம் பெறும்வரையில் தங்களது ஊக்கத்தை எல்லாம் செலவிடவேண்டும். படித்தவர்களாயும் பட்டம் பெற்றவர்களாயுமிருக்கும் அடிமைகளைவிட படிக்

காதவர்களாயும், அறியாமை மிகுந்தவர்களாயுமிருக்கும் சுயேச்சை பொருந்தியவர்களே சிறந்தவர்கள். படிப்பு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாயிருக்கின்றதோ அவ்வள வுக்கவ்வளவு அவமானமும், அடிமைத்தனமும் அதிகமாக இருக்கின்றது. சுவாமி விவேகானந்தர் ஒரு சமயம் வெருப்படைந்து எல்லா மாணவர்களும், தங்களது புத்த கங்களேயும், அங்கிகளேயும், சன்னதுகளேயும், சர்வ கலா சாலே வாழ்க்கையின் இதர சின்னங்களேயும் அருகிலுள்ள சமுத்திரத்தில் எறிந்துவிட்டு தேச விடுதலேக்காக பாடு பட அதிக அவகாசமும், மனேபாவமும் பெறவேண்டு மென்ருர். எந்த நாட்டிலும் உற்சாகமும், தேசாபிமான மும், சுயநலத் தியாகமும் வாய்ந்த யுவர்களால்தான் சுதந் தரப்போராட்டம் வெற்றிகரமாக நடந்திருக்கிறது. நமது வாலிபர்களும் நம் நாட்டில் அவ்வாறு செய்யக்கூடுமென நம்புகிறேன். யுவர்கள் முன்வராவிட்டால் எந்த திட்ட மும் ஏட்டளவிலேயே இருக்கும். நம் நாட்டு வாலிபர்கள் சில சமயங்களில் அயல்நாட்டு வாலிபர்களேவிட சிறந்த வர்களா யிருக்கிருர்கள். நம்மவர்கள் அயல்நாட்டு வாலி பர் மாதிரியே தேசாபிமான மிகுதியும், சுயநலத் தியாக உணர்ச்சியும், தைரியமும் சுதந்தரமடைய வேண்டுமென்ற திடசித்தமும் கொண்டிருக்கின்றனர். வேண்டியதெல் யாம் சரியான கட்டுப்பாடும் வழிகாட்டுதலும்தான்.

கஷ்டப்படும் மானிடவர்க்கத்துக்கு சேவை செய்வ தும், தாய்நாட்டின் விடுதலேக்காகத் தியாகம் செய்வதும், அடிமைத்தனத்தைப் போக்க உங்கள் சத்தியனேத்தையும் கொண்டு முயற்சிப்பதையும் உங்களது வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்ளுங்கள்.

கிராமங்களேப் பாருங்கள். ஜனங்கள் தங்க வீடில்லா மல், உடுக்கத் துணியில்லாமல், உண்ண உணவில்லாமல் படிப்பில்லாமல், வியாதியால் பீடிக்கப்பட்டு வாழ்வதைக் காண்பீர்கள். ஆஸ்பத்திரிகள்கூட வெகுதூரத்திலிருக் கின்றன. அவர்கள் கிராமத்து நாய்களேப்போல் வாழ்ந்து பட்டிணத்து எலிகளேப்போல் இறக்கின்றனர். கருணே பொருந்திய கவர்ன்மெண்டார் இவர்களுக்கு செய்து

கொடுக்கும் சௌகரியம் இன்றியமையாத கள்ளுக்கடை தான். இவை கிராமத்திற்கு ஒன்றுவீதம் இருக்கின்றன. இவ்வாறில்லாவிட்டாலும் கிராமத்திற்கு சமீபத்திலேனு மிருக்கின்றன. இனி இம்மாதிரியான நிலைமை ஒருநாள் கூட நீடித்திருக்க நீங்கள் அநுமதிப்பீர்களா? உங்களது தேசம் தனது பழைய அந்தஸ்தையும், சுதந்தரத்தையும், கீர்த்தியையும்பெற இறுதியான முயற்ச்சியைச் செய்கை யில், அதற்காகப் போராடுகையில், நீங்கள் இங்கிலாந்தி லுள்ள அரசர்களையும், ராணிகளையும் பற்றிய உபயோக மற்ற விஷயங்களைபடித்து உங்களது பணத்தையும், காலத் தையும் இன்னும் வீணுக்கி வருவீர்களா? உங்களது நிர் கதியான நிலைமையைக்குறித்து அவமானப்படவில்லையா? உங்கள் காலேஜ் படிப்பு முடியும்வரையில் ராஜீய விஷயத் தில் கலக்கக்கூடாதென்று சுயநலமிகள் பிதற்றுவதைக் காதில் போட்டுக்கொள்ளாதீர்கள்.

மாணவர்களை எல்லா விதமான ராஜீய விஷயங்களி லும் கலந்துகொள்ளக் கூடாதென்றால் அதில் அர்த்தமிருக் கும். ஆனல் அதிகாரிகளும், உபாத்தியாயர்களும் மாண வர்களை ராஜவிசுவாச வைபவங்களில் விருப்பமில்லவிட்டா லும் கலக்கும்படி செய்கின்றனர். ராஜப்பிரதிநிதி அல் லது ராஜகுமாரர் வரவில் கலப்பது மாணவர் கடமையாம். ஆனல் தேசீயக் காரியத்தில் கலப்பது வாழ்க்கையை நாசப்படுத்திக் கொள்ளுவதாகுமாம். நீங்கள் தற்போதை ராஜீய போராட்டத்தில் உங்களால் இயன்றதனைத்தையும் செய்ய கடமைப்பட்டிருக்கின்றீர்கள்.”

---

## கிராம சீர்திருத்தம்.

நம் நாட்டிலிருக்கும் பள்ளிக்கூடங்களில் கைத் தொழிற் கல்விபோதிக்கப்படுகிறதா? குமாஸ்தா வேலை படிப்பே நாம் கற்றுக் கொள்ளுவது? கொஞ்ச காலத் துக்குமுன்பு நடந்த சட்டமறுப்புப்போரில் எத்தனை பட்ட தாரிகள் கலந்து கொண்டார்கள்? சுல்ப தொகையினரே. காங்கரஸ்காரர்கள் முயற்ச்சியால் வாங்கப்படும் சுயராஜ்

யத்தில் எல்லோருக்கும் பங்கு உண்டல்லவா? மேல் நாட்டு முறைகளை தழுவி நடத்தப்படும் பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு இந் நாட்டு பழக்க வழக்கங்களும், நடைமுறைகளும் கருப்பாய் தோன்றுகின்றன. பள்ளிக்கூடங்களிலே படித்து பட்டம் பெற்றவர்கள் தான் புத்திசாலிகள் என்பதை நாம் ஒத்துக்கொள்ளவில்லை. பள்ளியிலே படிக்காமல் எத்தனையோ மனிதர்கள் உலகம்வியக்கும் வேலைகளை செய்திருக்கின்றனர். மஹாத்மா காந்தியவர்கள் சொல்வதைக் கவனியுங்கள்:—

"நன்மை உண்டாகும் என்ற நிச்சமில்லாத படிப்பினுனும் சர்டிபிகேட்டினுலும் பெற்றோர்களும், மாணவர்களும் தங்களது ஆத்மாவை கெடுத்துக்கொள்ளுவதால் யாது பயன். மாணவர்களுக்கு கல்வி போதிக்க தேசிய ஸ்தாபனங்களிருக்கின்றன. இவைகளையும் விரும்பாவிடில் அவர்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு வாசிக்கலாம். பள்ளிக்கூடங்களில் போய்வாசித்தால்தான் புத்தியுண்டாகும் என்று நினைப்பது மூட நம்பிக்கையாகும். கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதற்கு முந்தி உலகத்தில் பிரசித்திப்பெற்ற மாணவர்களிருந்திருக்கிறார்கள். தானுகப் படிப்பதைக்காட்டிலும் மேலானது வேறெதும் மில்லை. கல்லூரிகளும், பள்ளிக்கூடங்களும், வெறும் கல்விப் பட்டங்கள் பெருவதற்குதான் பிரயோஜனமாக இருக்கின்றன. சாரத்தை விட்டுவிட்டு வெறும் சக்கையைத்தான் நாம் எடுத்துக்கொள்ளுகிறோம். ஆகவே நான் பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் பற்றி இழிவாகக்கூற விரும்பவில்லை. அவைகளினுலும் எவ்வளவோ பிரயோஜனமிருக்கின்றது. ஆனல் நாம் அவைகளைப்பற்றி அதிகமாக நினைத்து காரியங்களைச் செய்கிறோம். புத்திவிருத்தியாகும் அநேக துறைகளில் அவைகளும் அதாவது கல்லூரிகளும், பள்ளிக்கூடங்களும் ஒரு வழியாகுமே தவிர வேறொன்று மில்லை" (யங் இந்தியா).

பட்டிணங்களிலே படித்து பட்டம் பெற்றவர்களுள் அநேகர் தாம் ஏதோ அதிகம் தெரிந்துகொண்டதாக எண்ணுகிறார்கள். மாணவர்களே, ஏன் படிக்கிறீர்கள்?

என்று கேளுங்கள். 100-க்கு 99-பேர் ஏதாவது உத்யோகம் சம்பாதிக்கலாம் என்று படிக்கிறார்களே தவிர, அறிவு வளர்ச்சிக்காக படிக்கிறார்கள் என்றெண்ணுவது மில்லை. அம்மாதிரி நோக்கமும் நம் மாணவர்களுக்கு இல்லை. பட்டதாரிகளாலும், வக்கீல்களாலும் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகளை விட தீமைகளே அதிகம். தேசம் எக்கேடு கெட்டாலும் தங்களுக்கு பணம் வந்தால் போதுமென்றிருக்கிறவரையிலும் அவர்களுக்கேதான் தீமை உண்டாகும். கேரள மாணவர் மகா நாட்டிலே கே. எப். நரிமன் பட்டதாரிகளைக் குறித்து சொன்னதாவது:—

"நமது சர்வகலாசாலை பட்டதாரிகள் அவநம்பிக்கை மிகுந்து பிரிட்டிஷ் ஆட்சி இருப்பது இன்றியமையாதது என்று கருதும் அடிமை புத்தியவாய்ந்தவர்களாக இருக்கின்றனர். முன்னர் பட்டதாரிகளை விசாரித்தபொழுது அவர்கள் பொய் ஆடம்பரங்களையும், கொழுத்த சம்பளமும் வாய்ந்த கவர்ன்மெண்ட் வேலையை பெறுவதையும், அழகிய மோட்டார்களையும், பெரிய மாளிகையையும், நூதனமான முறையில் வாழும் அழகிய மனைவியையும் பெற இயலும்படி சாத்தியமானால் மந்திரி, நிர்வாக சபை மெம்பராவதையும் தங்களது வாழ்க்கையின் இலக்ஷிய மென்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் தங்களைப்போல் உயர்தரமான அடிமையைக் குழந்தையாய் பெறவிரும்புகின்றனர். எவ்வளவு சுயநலமான வாழ்க்கை, பாருங்கள். இவர்களது வாழ்க்கைக்கும் உயர்தரமான பந்தயக்குதிரைகளின் வாழ்க்கைக்கும் வித்தியாசமிருப்பதாக எனக்கு தெரியவில்லை. பந்தயக் குதிரைகள் நன்றாய் போஷிக்கப் படுகின்றன. அவ்வையும் சில சமயங்களில் நிர்வாகசபை மெம்பர், மந்திரிகள் இவர்களது சம்பளத்தை விட அதிகமான வருவாயை அளிக்கின்றன. அவை அதிகமான லாபம் கொடுக்கின்றன. இக்கூட்டத்தில் இம்மாதிரி சுயநலத்தையே வாழ்க்கை நோக்கமாகக் கொண்டிருப்பவர்கள் எவருமிருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்."

கிராமங்களில் குட்டிச்சுவர்களின் எண்ணிக்கை தினே தினே அதிகரித்தும் பட்டினங்களிலே நாய் கழுதை

குதிரைகூட குடியிருக்க லாயக்கில்லாத வீடுகளுக்கு வாடகை இரட்டிப்பாகியும் வருவதைப் பாருங்கள். முக்கியமாக பிராமண அக்கிராரங்கள் இருந்தயிடமே தெரியாமல் புல்முளைத்துவிட்டது. புத்தியையும் படிப்பையும் நாம் விவசாயம், கைத்தொழில், சிற்பம், வாணிபம், முதலிய சிறந்த தொழில்களிலே உபயோகப்படுத்தினல் எண்ணற்ற நன்மைகள் உண்டாகும். படித்தமனிதன் கிராமவாசியோடு நெருங்கிப் பழகுவதும், பேசுவதும், அவன் கஷ்டசுகங்களில் கலந்துகொள்ளுவதுமில்லை. படித்தபின் விவசாயம் என்பது கேவலமான தொழிலாய் விடுகிறது. நல்லவேளையாக கடவுள் அவதாரம் என்று சொல்லும்படியான காந்திமஹான் நம் நாட்டிலே ஜனித்தார். அவர் இன்று இல்லாதிருப்பாரேயானல் பட்டதாரிகளும், வக்கீல்களும், சுயநலப் பணக்காரர்களும் தேசத்தை கெடுத்தே இருப்பார்கள். கிராமங்கள் நரம்புச்சிலந்தி, காலரா போன்ற தொத்துவியாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கின்றன. சேலம் ஜில்லாவில் ஓமலூர், தர்மபுரி தாலுக்காக்களில் அநேக கிராமங்களில் 100-க்கு 30-பேர் நரம்பு சிலந்தி நோயால் அவஸ்தைப் படுகின்றனர். படித்த வகுப்பாருக்கு குடியானவனிடம் பேசுவதே கௌரவக் குறைவாக இருக்கும்போது மற்ற நன்மைகள் எவ்வாறு உண்டாகும். போதாக்குறைக்கு வீண் வியாஜ்ஜியங்கள். வியாஜ்ஜியங்களுக்கு காரணஸ்த்தர்கள் வக்கீல்களே. வக்கீல்களின் எண்ணிக்கை உயர்வதுபோல குற்றங்களின் தொகையும் இரட்டிப்பாகின்றன. வக்கீல்களே நம்நாட்டில் இல்லாத காலத்தில் காரியங்கள் நடைபெருமல் நின்றுவிடவில்லை. கிராமவாசிகளே! கோர்ட்க்கும், கச்சேரிக்கும் போகாதீர்கள். உங்கள் வியாஜ்ஜியங்களை பஞ்சாயத்து மூலமாய் பைசல் செய்துக்கொள்ளுங்கள். கோர்டுக்குப் போவதால் நமக்கு அநுகூலம் ஏற்படுவதற்கு பதிலாக பணச்சிலவே உண்டாகின்றது. வக்கீலுக்கு பணத்தை கொட்டுவதைக் காட்டிலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதே மேலாகும். அப்பப்ப! கிராமவாசிக்கு எவ்வளவு தொந்திரவுகள். கிராம முன்சீப்பு, கர்ணம், ரெவின்யூ அதிகாரிகள், சுகா

தார அதிகாரிகள், மற்ற அதிகாரிகளுக்கெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ காய்கறிகள் இனமாக சப்ளை செய்யவேண்டும். காடுகளுக் கருகாமையிலிருக்கும் கிராமங்களில் காட்டிலாகா அதிகாரிகள்தான் தேவதைகள். இனமாக சப்ளை செய்ய மறுப்போன் எக்காரணத்துக்காக வேணும் ஒரு சமயம் அவர்களிடம் மாட்டிக்கொள்ள வேண்டிவரும். சர்க்கார் கிராமங்களின் ராஜப்பிரதிநிதிகளைப்போல் உள்ள கிராம முன்சீப்புக்கு மறுத்துப்பேசும் கிராமவாசி, அந்த கிராமத்திலேயே இருக்கமுடியாது.

கிராமத்திலேயுள்ள சிறியசந்துகளிலும் பொந்துகளிலும் உள்ள குப்பை கூளங்களை கவனிப்பாரில்லை. ஊரைச் சுற்றிலும் உள்ள நாகதாளி புதர்களின்யிடையிடையே இருக்கும் மல ஜலங்களின் நாற்றம் ஒருமழை பெய்துவிட்டால் கிராமத்தையே சுகந்த வாசனையால் சோபிக்கச் செய்கிறது. எந்த இழவும் கிராமத்துக்கேதான். குடித்தண்ணீர் வசதிகளோ சாமிதான் பார்க்கவேண்டும். இதுமாதிரி கிராமங்களை நாம் ஆயிரக்கணக்கில் காட்டுகிறோம். மூடப்பழக்க வழக்கங்கள், அநாகரீகமான தெய்வவணக்கங்கள், சாமிக்கும் கள் சாராயம் படைக்கும் அறியாமை எல்லாம் கிராமங்களில் மலிந்திருக்கின்றன. ஜாதி வித்தியாசங்களுக்கு கிராமங்கள் யிருப்பிடம். இந்த ஜாதிமேல், அந்த ஜாதி கீழ், சக்கிலிக்கு பறையன் உயர்ந்தவன், பறயனுக்கு ஏகாலி பறயன் தாழ்ந்தவன், முதலியாருக்கு செட்டியார் ஜாஸ்தி, செட்டிமாருக்கு பிள்ளை கம்மி. இந்த அநியாயத்தையும், அறியாமையையும், கிராமங்களில் பார்க்கும்போது யார் மனம்தான் நோவாமலிருக்காது. ஒரு கிராமத்துக்கு பள்ளிகூடம், சிறிய ஆஸ்பத்திரி, குடிப்பதற்கு நல்ல தண்ணீர் வசதி, யோக்கியப் பொருப்புள்ளவர்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுறவுபாங்கி பகலிலே படிக்கவசதி யில்லாதவர்களுக்கு இராப்பள்ளிக்கூடம் பொதுவாசகசாலை இவைகளைப் போன்றவைகள் கட்டாயம் இருக்கவேண்டும். உங்கள் கிராமத்தில் இவைகள் இருக்கின்றனவா? இல்லையானால் இவைகளை யடைவதற்கு என்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள்?

கூஜராத் மாகாண கிராமங்கள் இந்தியாவிலேயே எல்லா வகைகளிலும் தலை சிறந்து விளங்குகின்றன. ஏன்? ஸர்தார் படேலின் கீழ் அநேக வீர வாலிபர்கள் தியாக உணர்ச்சியுள்ளவர்களாய் இரவும் பகலும் உழைத்து தங்கள் மாகாணத்தை எப்படி முன்னுக்கு கொண்டு வரலாம் என்று பாடுபடுகிறார்கள். தமிழ் நாட்டுத் தலைவர்களும் வாலிபர்களும் என்ன செய்கிறார்கள்? இட்லி, காபி, நெய் தோசை கிடைக்கிற கொஞ்சம் பெரிய ஊர்களைவிட்டு நகர்வதுகூட இல்லை. பாழாய்போன பிராமண, பிராமணரல்லாத கக்ஷி சண்டையால் தலைவர்களுக்குள்ளே பிணக்குகள் ஏற்படுவதால் ஒருவரை ஒருவர் நம்புகிறதில்லை. மேடை பிரசங்கங்கள் செய்வதிலே தமிழ்நாட்டுத் தலைவர்கள் பேர் போனவர்கள். காரியங்களை அனுஷ்டானத்தில் காட்டுவோர் சிலரே. 1920-லிருந்து, அழகான சட்டைகளணிந்து மணிக்கணக்கில் பிரசங்கமாரிகள் பெய்த தலைவர்கள் எல்லாம் 1930-ல் சட்டமறுப்பு இயக்கம் பரிக்ஷையில் அநாமதேய பேர்வழிகளாக போய்விட்டார்கள். இப்போது சாதாரண ஜனங்களே தமிழ் நாட்டில் காங்க்ரஸ் திட்டத்தை நடத்திவருகிறார்கள். வட இந்தியர்கள் நம்மைப்பார்த்து சிரிக்கிறார்கள். கராச்சி காங்கிரஸிலேகூட தென்னாட்டு பிரதிநிதிகளுக்கு சரியான மரியாதைகள் கிடைக்கவில்லை என்று கேள்வி.

படித்தவர்கள் மறுபடியும் கிராமங்களிலேயே குடியிருக்க ஆசைகொள்ளவேண்டும். கிராமத்துக்குத் தேவையானவைகளை பூர்த்தி செய்துவைக்க முயலவேண்டும். ஒருவனுக்கு வாயால் சொல்லுவதைக் காட்டிலும் அனுஷ்டானத்தில் செய்து காட்டுவது சிறந்தது. உதாரணமாக இரண்டு பக்கத்திலும் வீடுகளுள்ள ஒருவீதியிலே ஒரு வீட்டுக்காரி தன்வீட்டு வாசலில் கொஞ்சம் பாகத்தை மட்டும் சுத்தம் செய்கிறாள். எதிர்வீட்டுக்காரியும் கொஞ்சம் பாகத்தையே கூட்டுகிறாள். இரண்டுக்கும் நடுவிலே உள்ள குப்பை கூளங்களை கேட்பாரே யில்லை. இந்த சந்தர்ப்பங்களிலே நாமே துடைப்பத்தை எடுத்து அதை பெருக்கினோமானல் அவர்கள் வெட்கப்பட்டு, மறுதடவை நம்மை அதுமாதிரி செய்யவிடமாட்டார்கள் என்பது நிச்

சயம். படித்தவர்கள் வீதி கூட்டுவதா என்று வெட்கப் படவேண்டியதில்லை. நல்ல காரியங்களைச் செய்யும்போது வெட்கப்படவேண்டியதில்லை. சுகாதார உத்தியோகஸ்தர்கள் செய்யும் வேலையை நாம் செய்யலாம். அவர்கள் கிராமங்களுக்கு உத்யோக தோரணையில் வந்து செய்வதைக்காட்டிலும் நம்மால் சாதாரணமாய் அதிகம் செய்ய முடியும். நரம்புசிலந்தி ரோகம், கொக்கிப்புழு ரோகம், அம்மை, காலரா முதலிய வியாதிகள் வரும்விதம், ஏன் வருகின்றன, எப்படித் தடுக்கலாம் என்பனவற்றை நமக்கு அவகாசம் உள்ளபோதெல்லாம் கூட்டங்கள் போட்டு பிரசாரம் செய்யலாம். அல்லது வீடுவீடாகப் போய் சொல்லுவது இன்னும் அதிக பலன் தரும். படித்த வாலிபர்கள் கிராமவாசிகளுக்கு நண்பர்களாகவும், வழிகாட்டிகளாகவும் இருத்தல் வேண்டும். காங்கிரஸால் நியமிக்கப்பட்ட இந்திய கடன் விசாரணைக் கமிட்டியின் தலைவரும், பொருள் சாஸ்திர நிபுணரான ஜெ. ஸி. குமரப்பா கிராம புணருத்தாரண விஷயமாய் கூஜராத் கிராம ஊழியர்களுக்கு செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது :—

"வாழ்வுத் தரத்தைக் குறைத்துக் கொள்ளும்படிக் கிராம ஊழியர்கள் விவசாயிகளுக்கு உபதேசம் செய்வதை நான் கேட்டிருக்கிறேன். ஒரு எல்லைக்குட்பட்டு இது நல்ல புத்திமதிதான். துணிக்கு தகுந்தபடியே சட்டையை தைத்துக் கொள்ளவேண்டும். ஆனால் அந்த துணியானது சொக்காய் தைப்பதற்கு போதியதாக இல்லாமலிருக்கையில் துணியை சம்பாதிக்க வேண்டும். விவசாயிகள் வயிற்றுக்கு போதிய ஆகாரத்திற்குக் குறைவாகவே சாப்பிடுகிறார்கள். கீழ்பட்டவர்களின் நிலைமை சகிக்கமுடியாததாக இருக்கிறது. துறவித்தன்மை நமக்கெல்லாம் பொருத்தமானதாக இருக்கலாம். எல்லோரும் துறவிகளாகிவிட வேண்டுமென்று எதிர்பார்க்கமுடியாது. நாம் இயற்கைக்கு விரோதமாக நடந்துகொண்டால் சங்கடமே ஏற்படுகிறது. அனாவசியமான செலவுகளைக் குறைத்து அவசியமான இனங்களுக்கு அவைகளை உபயோகிக்கலாமாயினும் கிரமமான ஆசாபாசங்களை ஒடுக்குவது அபாயகரமானதாகிவிடும். தமாஷ் செலவுகளுக்காக

சிறிது தொகையையும் ஒதுக்கி வைக்காத எந்த குடும்ப வரவு செலவு திட்டமும் திருப்திகரமானதென்று சொல்லுவதற்கில்லை. இப்பொழுதே வைத்தியம், கல்வி முதலிய பல இனங்களுக்குப் பணமில்லாமலிருப்பதால் வருமானத்தைப் பெருக்குவதற்கு வழி தேடவேண்டும். காந்திஜீ நூல் நூற்கும்படி சொல்லியிருக்கிறார். இதனுடன் அந்தந்த இடத்திற்குப் பொருத்தமான தொழில்களை செய்யும்படி நாம் விவசாயிகளுக்கு உபதேசம் செய்யலாம். இதன்மூலம் வேலையில்லா திண்டாட்டத்தை நாம் ஒழிப்பின் ஜனங்களுடைய க்ஷேமத்தை நாம் பெருக்கியவர்களாவோம்.''

"அந்தந்த கிராமத்திற்கு வேண்டியது அங்கங்கே கிடைக்கும்படி செய்துவிட்டால் பிறர் வந்து சுரண்டிக் கொண்டு போவதற்கு இடமிராது. உள்ளூர் சாமான்களை ஆதரிக்கவேண்டுமென்ற உணர்ச்சி ஜனங்களுக்கு ஏற்படும்படிச் செய்யவேண்டும். இப்பொழுது வெளியூர்களிலிருந்து தருவிக்கும் பல சாமான்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்துகொள்ளலாம். கிராம ஜனங்களுக்கு சுகாதார விஷயத்தையும் போதிக்கவேண்டும். கிராமாந்திரங்களில் வைத்திய வசதி குறைவாக இருக்கிறது. கிராம ஊழியர்கள் வைத்தியமும் தெரிந்துகொள்வது உபயோகமாக இருக்கும். புராதான கால தன்மையை உணர்ந்து அவைகளின் அடிப்படைத் தத்துவங்களை தெரிந்து கொள்ளவேண்டும். நமது சரித்திரத்திலேயே நாம் ஒரு நெருக்கடியான சமயத்திலிருக்கிறோம். பழைய ஸ்தாபனங்களைத் தகர்த்துவிட்டு காலத்திற்கேற்றபடி புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டியிருக்கிறது. ஆனால் அவ்விதம் ஏற்படுத்துகையில் பழைய தர்மங்களை கைவிட்டு விடக்கூடாது. உங்களுடைய வேலை உடனே பலன் கொடுக்காமலிருக்கலாம். அதில் அதைர்யமடைந்துவிடாதீர்கள். இருட்டறைச் சங்கங்கள் ஒரு இராத்திரியில் ஸ்தாபிதமாகிவிடும். ஆலமரம் பயிராவதற்கு அதிக காலம் செல்லும். அது வளர்ந்துவிடின் எல்லோருக்கும் தங்குவதற்கு நிழலைக்கொடுக்கும். அவ்விதமே இப்பொழுது செய்யும்

வேலையினால் நாளடைவில் நல்ல பலனேற்படுமென்ற நம்பிக்கையுடன் வேலை செய்யுங்கள்". —ஜே. ஸி. குமரப்பா.

---

## எளிய வாழ்க்கை.

படித்த வகுப்பாருக்கு இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்கும், தரித்திரத்துக்கும், ராஜீய காரணங்கள் பல இருப்பினும், தேவைக்கதிகமானவைகளை அடைய விரும்புவது ஒரு காரணமாகும். பட்டிணத்துப் படிப்பால் விளையும் கெடுதிகளில் அதிகமான தேவைகளை சிருஷ்டித்துக்கொள்ளுவதும் ஒன்ருகும். ஒருவனுக்கு தேவைகள் அதிகமாகும்போதுதான் அவன் சம்பாதிக்கவேண்டியதும் அதிகமாகிறது. சாதாரணமான வாழ்க்கையை நடத்துகிறவன் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை என்பதற்கு உதாரணம் கூறுகிறேம்.

அமெரிக்கா நாட்டிலே எளிய வாழ்க்கையைக் கைக்கொண்ட ஒரு பத்திராசிரியர் அந்நாட்டிலே நடக்கும் அட்டூழியங்களையும், அவைகளைச் செய்வோரையும் தயவு தாக்ஷயண்ணமின்றி தன் பத்திரிகை வாயிலாக கடுமையாக தாக்கி எழுதிவந்தார். அவருடைய நண்பர்கள் பலர் "ஐயா, நீர் இம்மாதிரி எழுதுவது பெருந் தீமையை விளைக்கும். பெரிய மனிதர்கள், பணக்காரர்கள், உத்யோகஸ்தர்கள் முதலியவர்கள் உன்மேல் பகைமை கொள்வார்கள்" என்று எச்சரிக்கை செய்தார்கள். பத்திராதிபர் அவர்களுக்கு புத்தி கற்பிப்பான் வேண்டி, ஒருநாள் விருந்து நடத்த ஏற்பாடு செய்துவிட்டு, நண்பர்கள் பலருக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பினர். எல்லோரும் விருந்துக்கு பிரசன்னமானர்கள். பெரிய பத்திரிகாசிரியர் வீட்டிலே அருமையான விருந்து கிடைக்குமென்று எதிர்பார்த்தற்கு மாருக சாதாரணமான ரொட்டியும், வெண்ணையும் சுத்த ஜலமும் பரிமாரப்பட்டன. அவர்களுக்கு இம்மாதிரி விருந்து சாப்பிட்டு வழக்கமில்லாததால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கையில் பத்திரிகாசிரியர் "நண்பர்களே சாப்பிடுங்கள்" என்று சொல்லி தான் அந்த ரொட்டியையும் வெண்ணையையும் சாப்பிட்டு,

தாகத்துக்கு தண்ணீரருந்தினுர். அப்போதும் அவர்கள் வாளாயிருந்தனர். பத்திரிகாசிரியர் "நண்பர்களே, சாதாரண ஆகாரம் சாப்பிட்டு, சாதாரண வாழ்க்கை நடத்துகிறவனுக்கு யாருடைய தயவு தாக்ஷயண்யமும் தேவையில்லை. ரொட்டியும், தண்ணீரும் யாருக்கும் கிடைக்கும். டம்பமான சாப்பாடு சாப்பிட்டு, ஆடம்பர மான வாழ்கையை நடத்துவோர்கள் பிறருடைய தயவுக்கு காத்திருக்கவேண்டியதுதான்" என்ருர்.

"ஒருவன் தன் தேவைக்கதிகமான பணத்தையும், தானியத்தையும், நிலத்தையும் அடைய விரும்புவதால் தான், உலகத்திலே மற்றவர்களுக்கு தொந்திரவுகளும், கஷ்டங்களும் உண்டாகின்றன" என்று மஹாத்மா காந்தி யடிகள் சொல்லி இருக்கிருர். படித்த வாலிபர்கள் சாதாரண வாழ்க்கையை நடத்த கற்றுக்கொண்டால், மற்ற கஷ்டங்கள் எளிதில் தீர்ந்துவிடும். இதனுல் நாம் துறவி களைப் போலிருக்கச் சொல்லவில்லை. நம் வாழ்க்கைக்கு அவசியமானது,சௌகரியமானது, ஆடம்பரமானது என்ற மூன்றில் அவசியமானவைகளை அடைவதிலேயே திருப்தி அடைந்தால் பல தொந்திரவுகளுக்கும் கஷ்ட நிஷ்டூரங் களுக்கும் இடமிராது. ஒருவனுக்கு உடுத்திக்கொள்ள வேஷ்டியும் மேலுக்கு ஒரு வஸ்திரம் அல்லது ஒரு அங்கி யும் அவசியமானது. ஆனுல் அங்கியின்மேலே வெய்ஸ்ட் கோட், அதற்கு மேல் கோட்டு, கழுத்திலே காலர் டை முதலியன அணிவது ஆடம்பரமானது. ஆடம்பரமான உடைகளை அணிவோனை குறித்து "உயர்ந்த உடுப்பு, அயர்ந்த அடுப்பு" என ஒரு பழமொழியுண்டு.

தனக்கு மாத்திரம் மிதமிஞ்சிய சௌகரியங்களைச் செய்துகொள்ளுகிறவன், தன் குடும்பம் பூராவுக்கும் அந்த சௌகரியங்களை செய்துவைக்க முடியாது. காப்பி கிளப்பு களிலே பாருங்கள். எத்தனையோபேர் தங்கள் வரையில் இட்லி, ரோஸ்ட், பூரி, காபி முதலியவைகளை விலாப்புடைக் கத் தின்பதும், அவர்கள் வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகள் பழைய சோற்றையே சாப்பிடுவதும் எவ்வளவு மோசமான காரியம். புத்தர், இயேசுகிருஸ்து, மஹமத் நபி, முதலியு

முற்காலத்து மஹான்களும், மஹாத்மா காந்திபோன்ற தற்காலத்து மஹான்களும் சாதாரண எளிய வாழ்கை யையே கைக்கொண்டனர். பண்டித ஜவஹரிலால் நேரு செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, செல்வத் திலேயே பிறண்டவர், தேசிய அபிமானத்தால் டாம்பீ கத்தை வெறுத்து, சாதாரண உடை யுடுத்து, சாதாரண வாழ்க்கையை நடத்துவது எல்லோருக்கும் தெரிந்த விஷ யம். நம்மவரில் சிலர் ஏதோ தங்கள் செல்வத்தை உல கத்தாருக்கு விளம்பரம் செய்யவேண்டி, செய்யும் வீண் படாடோபங்களிலே மற்றவர்கள் ஏன் தங்கள் கவனத்தை செலுத்தவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை. கோவில்களிலே நடக்கும் திருவிழாக்களிலே நம் பெண் மணிகள் நகைகள் அணிவதிலும், அன்னிய நாட்டு பட்டு புடவை ஜாகெட்டு முதலியவைகளை அணிவதிலும் போட்டிபோடுகிறார்கள். பணக்காரன் தன் பெண்ஜாதிக்கு வாங்கிக்கொடுக்கும் விலையுயர்ந்த நகைகள், அவனுக்கும், அவன் பெண்ஜாதிக்கும் மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகிறதாயினும், மற்ற ஏழை மக்களின் சுகாதாரத்தை யும், சந்தோஷத்தையும் கெடுத்துவிடுகிறது. பக்கத்து வீட்டு பணக்காரி நல்ல நகைகள் புடவைகள் அணிவதைக் கண்டு, ஏழையின் மனைவியும் அது வேண்டும், இது வேண் டும் என்று தன் புருஷனை தொந்திரவு செய்கிறாள். புருஷ னோ தன்னால் அவைகளை சம்பாதிக்க முடிவில்லையே என்று வெகு விசனப்படுவதால், அவன் திரேக பலமும், சந்தோ ஷமும் பாதகமடைகிறது. இதனால் அவன் அதிகமாக உழைக்கவும் சம்பாதிக்கவும் கூட சக்தியற்றவனாய் விடுகி றான். ஏழைகளைக் காப்பாற்றவே சோவியத் ரஷ்யாவில் பொதுவுடமை கொள்கையை அனுஷ்டிக்கின்றனர் போலும். இந்தியர்கள் நகைப் பயித்தியம் கொண்டவர் கள் என்று அமெரிக்கர்கள் நகைக்கிறார்கள். நகைகளுக்கு போடும் லக்ஷக்கணக்கான திரவியங்கள், பாங்கிகளுக்கும், மற்ற கைத்தொழிலுக்கும், உபயோகமாகுமேயானால் தேசத்துக்கு எவ்வளவு சௌகரியங்கள் உண்டாகும். தற் காலத்து யுவர்கள் பலர் தங்கள் மனைவிகளுக்கு நகை துணி மணிகளில் சிக்கனத்தை அநுசரிக்க வேண்டிய முறைகளை

போஷித்தும், நடைமுறையில் காட்டியும் வருவது புகழத் தக்கதாகும். இனிமேல்கொண்டு கலியாணம் செய்து கொண்டு சம்சாரத்தை நடத்தும் வாலிபர்கள், வீண் படாடோபங்களிலும், வெளிமயக்குகளிலும் ஏமாந்து போக மாட்டார்கள் என்று நம்புகிறோம். நம் முன்னோர்கள் தங்களுக்கு எவ்வளவோ சௌகரியங்களும், செல்வமும் இருந்தும் எளிய வாழ்க்கையையே நடத்தி வந்தார்கள். எளிய வாழ்க்கைக்கு இருப்பிடமான இந்தியா தேசத்திலே மேல்நாட்டு டாம்பீக வாழ்க்கையை நடத்துவது அபாயத்தையே உண்டாக்கும்.

நன்றாய் தெரியும் கண்களுக்கு ஷோக்கு மூக்குகண்ணாடி போட்டுக்கொள்ளுவதும் வேகும் வெயிலிலே கம்பளி சொக்காய்களை அணிவதும் காலுக்கு மேஜோடு போட்டு அதற்குமேல் பூட்ஸ் அணிவதும் நாகரிகமாய் தோன்றினாலும், அவைகளால் திரேக சுகம் பாதகமடைகிறதென்று அறிவுள்ள டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள். யுவர்கள் இனிமேலாகிலும், தங்கள் தாய்நாட்டுக்கு வேண்டிய சௌகரியங்களையும், சீர்திருத்தங்களையும் செய்ய முற்படுவார்கள் என்று நம்புகிறோம். கிராமங்களின் அபிவிருத்தியிலே அபிமானமுள்ளவர்கள் மஹாத்மாவின் கீழ்கண்ட வாக்கியங்களை கவனிக்க வேண்டுகிறோம்:

"நூற்றல், நெச்வு, கால் நடை வளர்ப்பு, செருப்பு தைத்தல் முதலிய உள்நாட்டு வேலைகள் திரும்பவும், கிராமங்களில் ஆரம்பமாகிவிடில் கிராமங்கள் அதிக செல்வமடைந்து விடும். குடியானவர்கள் பம்பாய் முதலாளிகளைப்போல் அவ்வளவு பணக்காரர்களாயிருக்க விரும்பவில்லை. ஆனால் கடன்காரர்களாய் இல்லாதிருக்கவே விரும்புகிறார்கள். அவர்கள் பெட்டியில் சில வெள்ளி நாணயங்களிருந்தால் போதும். வட்டிக்கு கடன் கொடுப்பவர்களிடமிருந்து அவர்கள் கடன் வாங்குவதற்கு பதிலாக, அவர்களிடம் கொடுத்துவைக்கும் சக்தியிருந்தால் போதும். அவர்களுக்கு சொந்த வீடுகளிருக்க வேண்டும். அவர்கள் கால்நடைகளின் தொகையும் பெருகவேண்டும்."